**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.37/2016

வாதி தரப்பு 1வது சாட்சி பழனிச்சாமி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பழனிச்சாமி | வயது | : | 62/23 |
| தகப்பனார் பெயர் | : | முனியன் | தாலுகா | : | விராலிமலை |
| கிராமம் | : | காரப்பட்டு | தொழில் | : | விவசாயம் |

நாள்-14.12.2023

வா.சா.1

**<u>8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) முனியன் விற்பன்னருக்கு நான் கடைசி மகன்.

2) வீராச்சாமிக்கு முன்னா் இரண்டு அக்காக்கள் உள்ளார்கள். வீராச்சாமிக்கு ஒரு தங்கையும் உண்டு.

3) சங்கிலிவிற்பன்னா் எனது சித்தப்பா.

4) எனது அப்பாவிற்கும், சித்தப்பாவிற்கும் வாய்மொழியாக சொத்துக்கள் பிரிக்கப்பட்டதை காட்டுவதற்கு வாய்மொழி சாட்சியங்கள் உள்ளார்கள்.

5) வழக்கு சொத்து பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) எங்கள் குடும்ப சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டு வீராச்சாமி வாங்கியது எனக்கு தெரியும்.

7) அந்த கிரையத்தை ரத்து செய்வதற்கும், பட்டாவை ரத்து செய்வதற்கும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

8) தாவா 93, 94 அயிட்ட சொத்துக்களை 8 முதல் 12 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியுள்ளார்கள்.

9) அந்த பட்டாவை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதற்குத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

10) 93 மற்றும் 94 அயிட்ட சொத்துக்கள் எனது அண்ணனின் தனிப்பட்ட சொத்து என்றாலும், அந்த சொத்துக்கள் அவரது தனிப்பட்ட வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

11) என்னுடைய 93, 94 அயிட்ட சொத்து என் அண்ணன் பெயரில்தான் உள்ளது என்றால் எங்கள் சம்மதத்தின் பேரிலும், பங்கு கொடுப்பார்கள் என்ற எண்ணத்திலும் அவர்கள் பெயரில் வாங்கப்பட்டது.

12) சிங்காரம், வீராச்சாமி, செல்வராஜ் ஆகிய மூன்று பேர்களின் பெயரில் 93, 94 அயிட்டம் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

13) சிங்காரம் மற்றும் செல்வராஜை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

14) கீரனூர் முன்சீப் கோர்ட்டில் 20/2011 வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். அதில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் சமரச தீர்ப்பு ஏற்பட்டது என்றால் இல்லை. அந்த வழக்கில் வீராச்சாமிக்கு 1/3 பங்கு உள்ளது என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் இல்லை.

15) கூட்டு பட்டாவாக மாற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

16) 93, 94 அயிட்ட சொத்துக்கள் எனது அண்ணனின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், இந்த வழக்கில் அந்த சொத்துக்களை தவறாக சேர்த்து பிரதிபலன் அடைய முயற்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.